**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**OS NO. 131/2021**

**01.07.2025 வா.சா.1 மாதவன் த.பெ. குருசாமி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை**

நான் ரூ. 25,75,000/- முன்பணம் முதல் பிரதிவாதி ஐயப்பனிடம் செலுத்தினேன். அதை நான் ஒரே தவணையில் செலுத்தினேன். நான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட சொத்து ஐயப்பனுக்கு சொந்தமானது. கிரைய ஒப்பந்தத்தில் நான் ஐயப்பனிடமும், அவர் மனைவியிடமும் கையொப்பம் பெற்றேன். அவர் மனைவியிடம் ஏன் கையொப்பம் பெற்றேன் என்று கேட்டால் அவர் மனைவியும் இந்த ஒப்பந்தம் பற்றி தெரிந்துகொள்ளவேண்டும் என்று கையொப்பம் பெற்றேன். ரூ. 25,75,000/- என்னிடம் எப்படி இருந்தது என்று கேட்டால் விவசாயம் செய்ததன் மூலமும், வங்கியில் நகை அடமானசெய்ததன் மூலமும் கிடைத்தது. நான் நெல் மற்றும் கரும்பு விவசாயம் செய்து வருமானம் ஈட்டினேன். நான் பிரதிவாதிகளுக்கு கொடுத்த கடனுக்காக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள நிர்பந்தம் செய்தேன் என்றும், ரூ. 25,75,000/-ற்கு எழுதிக்கொடுத்தால்தான் கடன் கொடுப்பேன் என்பதால் பிரதிவாதிகள் என்னிடம் ரூ. 9,00,000/- பெற்றுக்கொண்டு தாவா உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. சொத்து வாங்கவேண்டும் என்பதற்காக தான் பணம் கொடுத்தேன். 2ம் பிரதிவாதி என் மீது கொடுத்த புகார் சம்மந்தமாக குற்றப்பிரிவு போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் 2015 ல் இருந்து வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றும், கடன் வாங்குபவர்களிடம் இருந்து கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கச்சொல்லி வாங்கிக்கொண்டு கடன் வசூல் ஆன பிறகு அவர்களிடம் ஒப்பந்தத்தை ஒப்படைப்பது எனது வாடிக்கை என்று சொன்னால் சரியல்ல. தாவா ஒப்பந்தம் 11.02.2019 ல் போடப்பட்டது. அதன் பதிவு எண் என்ன என்று கேட்டால் 339/2019 ஆகும். அதே தேதியில் பிரதிவாதிகள் 1 ,2 ஆகியோருடன் முன்னர் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தை கிரையம் பெற இயலாததால் ரத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அவ்வாறு ரத்து செய்தபின்பு வேறு ஒரு தொகைக்காக பிரதிவாதிகளை மிரட்டி தாவா ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் ரூ. 25,75,000/- ஐ பிரதிவாதிகளிடம் நான்

கொடுக்கவில்லை என்பதும், 1,2 பிரதிவாதிகள் தங்களது சுய விருப்பத்தின்பேரில் அந்த உடன்படிக்கையில் கையொப்பம் இடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட சொத்தின் புல எண். 264/D1A1A -வில் உள்ளது. அதன் நான்கு எல்லைகள் என்ன என்று கேட்டால் வேணுகோபால் வீட்டிற்கு மேற்கு, ஆனந்தன் வீட்டிற்கும் வழிக்கும் கிழக்கு, 2 வது சொத்து பாகத்திற்கு வடக்கு, சன்னதி தெருவிற்கு தெற்கில் உள்ளது. நான் அத்திமூர் , தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நகைகளை அடகு வைத்தேன். எந்த தேதியில் வைத்தேன் என்று ஞாபகம் இல்லை. ரூ. 5,00,000/- ற்கு அடமானம் வைத்தேன். நான் தாவாவில் சொன்னதுபோல் ரூ. 25,75,000/- முன்தொகை செலுத்தவில்லை என்றும், பிரதிவாதிகள் முழு மனதோடு ஒப்பந்தத்தில் கையொப்பம் இடவில்லை என்றும், அவர்களை நான் மிரட்டி அவர்களிடம் கையொப்பம் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஒப்பந்தத்தில் கண்ட 15 மாதத்திற்கு பின் கிரைய தொகையின் மீதி தொகையை செலுத்த என்னிடம் போதிய வசதி இல்லாத காரணத்தினால் பிரதிவாதிகள் சொத்தை என் பெயரில் எழுதிக்கொடுக்க நான் முன் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த 15 மாதத்திற்குள் நான் மீதித்தொகையுடன் பிரதிவாதியை கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொள்ள அணுகினேன் என்பதற்கு ஆதாரமாக ஏதாவது ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. நான் அவரை நேரில் சென்று பலமுறை கேட்டேன். நான் வழக்கு தாக்கல் செய்த பின்பு கிரைய தொகையின் மீதி தொகையை நீதிமன்றத்தில் செலுத்தி உள்ளேனா என்றால் இல்லை.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.